Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 13, 2024

புதன்கிழமை மார்ச் 13, 2024 | ஒளி: 09 கதிர்: 211 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## வர்த்தமானி இரத்து

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியிடம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து , மீள் ஏற்றுமதிக்காக மிளகு உட்பட பல மசாலாப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தாமரை கோபுரத்தில் ஜோடி மரணம்

கொழும்பு தாமரை கோபுரத்தில் உள்ள உணவகம் ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது போதைப்பொருள் உட்கொண்ட இளைஞனும் யுவதியும் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் உடல்நலம் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர் என மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லேரியா- உடுமுல்ல பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட அழகு நிலையம் ஒன்றின் முகாமையாளரான ஹெட்டியாராச்சி ரசாங்கிகா ருக்ஷானி (வயது 27) தெஹிவளையில் வசித்து வந்த சமிந்து திரங்க பெர்னாண்டோ (வயது 22) இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## காய்கறிகளின் விலைகள் வேகமாக குறைந்தன

சந்தையில் கடந்த சில நாட்களாக மிகவும் உயர்ந்து காணப்பட்ட காய்கறிகளின் விலைகள் மிக வேகமாக குறைந்து வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். மிக அதிக விலைக்கு விற்கப்பட்ட கேரட், போஞ்சி, முட்டைகோஸ், மீன், மிளகாய் போன்ற காய்கறிகளின் விலை வேகமாக குறைந்து வருகிறது.

தொடர்ச்சி P2



## வடக்கு, கிழக்கு பெண்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

### வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு கோரிக்கை

எஸ்.றொசேரியன் லெம்பேட்

வடக்கு, கிழக்கு பெண்கள் எதிர்கொண்டு வரும் இன, மத ரீதியான அடக்குமுறைகளையும் நில ஆக்கிரமிப்பையும் , இராணுவ மயமாக்கலையும் முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடக்கு? கிழக்கு பெண்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

IMF பிரதிநிதிகளை

# “தனியே சந்திப்போம்”



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை ஐக்கிய மக்கள் சக்தி அடுத்த சில நாட்களில் சந்திக்கவுள்ளதால், இந்நாட்டில் தாய்மார்கள், சிசுக்கள், குழந்தைகள் மற்றும் பாடசாலை பிள்ளைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு நிலையை உடனடியாகப் போக்க சர்வதேச நாணய நிதியத்தின் விசேட ஒத்துழைப்பு வேலைத்திட்டம் தேவை என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் 1120ஆவது கட்டமாக, 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கம்பஹா, தொம்பே, மல்வான மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றது. அதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், இந்நாட்டில் சிசுக்கள், குழந்தை மற்றும் தாய்மார்களது ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்துள்ள. 2022இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், 5-18 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 25% எடை குறைந்த குழந்தைகள் என்பது தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற இன்னும் பல புள்ளி விவரங்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்து வருவதாகவும், தாய்மார்களும் குழந்தைகளும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படக்கூடிய குழுவாக மாறிவருவதனை எடுத்துக் காட்டுகின்றன என்றார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரு சிறப்பு நிதியத்தை நிறுவி,

தொடர்ச்சி P2



## மனித எலும்புகளில் காபன் பரிசோதனை

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார்- திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை 4 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் திருக்கேதீஸ்வர மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளை காபன் பரிசோதனைக்கு உட்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாகவும் சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “8 விடயங்களை பின்பற்ற மக்கள் முன்வர வேண்டும்”

### மார்ச்–12 அமைப்பு அழைப்பு

பாறுக் ஷிஹான்

ஊழல் அற்ற அரசியல்வாதியை தெரிவு செய்ய, எட்டு விடயங்களை பின்பற்றி செயற்பட மக்கள் முன்வர வேண்டும் என மார்ச்-12 அமைப்பின் அம்பாறை மாவட்ட குழு தெரிவித்துள்ளது.

கல்முனை சேனைக்குடியிருப்பு பகுதியிலுள்ள அதன் அலுவலகத்தில் அவ்வமைப்பு செவ்வாய்க்கிழமை (12) நடத்திய

தொடர்ச்சி P2




## பால் மா குறையும்

முதல் ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 100 முதல் 150 ரூபாவால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## “வெளியரங்கை தவிர்க்கவும்”

பாடசாலை மரதன் ஓட்டப் போட்டியின் போது திடீர் சுகவீனம் காரணமாக மாணவர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி வசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 1,101 பேர் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வரப்படும் ‘யுக்திய’ என்ற விசேட நடவடிக்கையில், கடந்த 24 மணித்தியாலங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கையை விசேட அதிரடிப்படையினர் (STF) மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, மொத்தமாக 1,101 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அதிகளவிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மனைவியிடமிருந்து கணவனை அபகரித்து கடத்தி வெட்டிக் கொலை

எம். றொசாந்த்

மனைவியுடன் சென்றுகொண்டிருந்த கணவனைக் கடத்திய வாள்வெட்டுக்குழு அவரை வெட்டி படுகொலைச் செய்த சம்பவம், யாழ்ப்பாணத்தில், திங்கட்கிழமை (11) இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில், வட்டுக்கோட்டை, மாவடி பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர், தனது மனைவியுடன் காரைநகரிலிருந்து வட்டுக்கோட்டை, மாவடியில் உள்ள வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது, பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் இரண்டு கார்களில் ஆயுதங்களுடன் நின்ற சிலர் அவர்களை வழி மறித்தனர்.

இதன்போது இருவரும் தப்பித்து கடற்படை முகாமுக்குள் உள்நுழைந்தனர்.



இந்நிலையில், கடற்படையினர் அவர்களை வெளியே விரட்டியுள்ளனர். அவர்கள் வெளியே வந்தபோது அங்கு காத்திருந்த வாள் வெட்டு கோஷ்டியினர், ஒரு காரில் மனைவியையும், அடுத்த காரில் குறித்த நபரையும் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து சென்றனர். பின்னர் மனைவியை சித்தங்கேணி சந்தியில் இறக்கி விட்டனர். அதன்பின்னர் மனைவி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்கு சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

### பெறாமகள் துஷ்பிரயோகம்:

## முதியவரான சிறிய தந்தைக்கு 12 வருட கடூழிய சிறை

சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2011ம் ஆண்டு பதினாறு வயதுக்கும் குறைந்த தனது பெறாமகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சிறிய தந்தைக்கு பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னர்



கிளிநொச்சி மேல் நீதிமன்றம் பன்னிரெண்டு ஆண்டு கால கடூழிய சிறைத்தண்டனை,

தொடர்ச்சி P2

# அடக்குமுறை முடிவுக்கு...

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டிணைவில் கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றது.

வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் கிளிநொச்சி பழைய கச்சேரி முன்றலில் இருந்து இருந்து பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளை எதிர்த்து விழிப்புணர்வு பேரணியாக கிளிநொச்சி பசுமை பூங்கா வளாகத்தைச் சென்றடைந்துள்ளனர். பேரணியின் முடிவில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தைச் சார்ந்த தமிழ் பேசும் பெண்கள் எதிர் கொண்டு வரும் பன்முகப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராகக் கூட்டாகக் குரல் கொடுப்பதற்காக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களிலும் இயங்கி வரும் பெண்கள் அமைப்புகள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்களான நாம் இங்கு ஓரணி திரண்டிருக்கிறோம்.

இலங்கையின் அனைத்து பெண்களும் இன, மத, சமூக வேறுபாடுகளைக் கடந்து ஆணாதிக்க அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். ஆணாதிக்கமயப்பட்ட குடும்ப, சமூக, வேலைத்தள, அரச அடக்குமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் அனைவரும் உள்ளாகின்றனர். பெண்கள் மீதான வன்முறை கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடியுடன் மோசமடைந்துள்ளது. இணையவழிக் குற்றங்கள் அதிகரித்துள்ளன.

எனினும், இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தைப் பாரம்பரிய வாழ்விடமாகக் கொண்ட தமிழ் பேசும் பெண்களான நாம் குறிப்பான பன்முகப்பட்ட அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வருகிறோம்:

1) இலங்கை அரசின் திட்டமிட்ட இன மற்றும் மொழி ரீதியான அடக்குமுறைகளுக்கு எழுவது வருடங்களுக்கு மேலாக உள்ளாகி வருகிறோம்.

2) முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட இன அழிப்புப் போரின் அழிவுகளையும் வலிகளையும் சுமந்துகொண்டு இருக்கிறோம்.

3) இன்றுவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ்ப் பெண்கள் எனும் காரணத்தாலேயே எமது சகோதரிகள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகின்றனர். தாய்மாராகவும், மனைவி மாராகவும், சகோதரிகளாகவும் எமது குடும்ப அங்கத்தவரின் பாதுகாப்பு குறித்து எப்பொழுதும் மனப் பதைப்புடன் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

4) உண்மையை அறிந்து கொள்ளவும், நீதிக்காகவும், நியாயமான இழப்பீடு களைப் பெறவும், எமது உறவுகளுக்காக நினைவேந்தல்களை மேற்கொள்ளவும், கௌரவமான அரசியல் உரிமைகளைக் கொண்ட பிரஜைகளாக வாழவும் குரல் கொடுத்து வருகிறோம்.

5) இலங்கை அரசானது இதுவரை பொறுப்புக்கூறலை புறக்கணித்து வருவதால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் எனும் வகையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி வருகிறோம்.

6) எமது சகோதரிகள் பலரும் அரசின் திட்டமிட்ட காணி அபகரிப்பு காரணமாக இன்று வரையில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். அரச திணைக்களங்களான வன இலாகா, தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றினால் எதேச்சாதிகாரமாகக் காணிகள் அபகரிக்கப்படுதல், அரச படைகளால் காணிகள் அபகரிக்கப்படுதல் காரணமாக வீடுகளையும் விவசாய நிலங்களையும் இழந்து பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். பொருளாதாரத்தை இழந்துள்ளனர்.

7) அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த மயமாக்கம் காரணமாக அச்சுறுத்தல்களையும் அவமானப்படுத்தல் களையும் எதிர்கொண்டு வருகின்றனர்

8) இராணுவ மயமாக்கப்பட்ட பிரதேசத்துப் பெண்கள் எனும் வகையில் பொதுவில் பெண்கள் அனைவரும் அச்சத்துடன் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்

9) வடக்கு கிழக்கில் பெண்களின் சுயாதீனமான சமூக நடவடிக்கைகள் அனைத்தும் அரச உளவுப் பிரிவின் தொடர் கண்காணிப்புக்கு உள்ளாவதுடன் பெண் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தல்களையும் அத்துமீறல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

10) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பத்துப் பெண்கள் பாதுகாப்புத் தரப்பினால் அச்சுறுத்தப்படல், தொடர் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படல், தாக்கப்படல் நடைபெறுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "தனியே சந்திப்போம்"

இந்த போசாக்கின்மை நிலையிலிருந்து விடுபட விசேட தேசிய வேலைத்திட்டமொன்று தேவை. ஊட்டச்சத்துக் குறைபாட்டின் வளர்ச்சி ஒரு தீய சுழற்சியை உருவாக்குதற்குச் சமன். இது நாட்டின் உற்பத்தித் திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என தெரிவித்தார்.

அத்துடன், அனைத்து அரச பாடசாலைகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டின் எதிர்காலம் சிறுவர்கள் என்பதால் அவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் மூடப்படுவதையும் சிறைச்சாலைகள் திறப்பதையும் தடுப்பதற்காகவே தனது இந்த முயற்சியை முன்னெடுத்து வருகின்றது.

ஒரு நாட்டின் பாடசாலை கட்டமைப்பு வலுப்பெறும் போது சிறைச்சாலைகள் மூடப்படுகிறது. பாடசாலை கட்டமைப்பை வலுப்படுத்துவதே பிரபஞ்சம் திட்டத்தின் பிரதான நோக்கம். நவீனத்துவ, ஸ்மார்ட் கல்வியை வழங்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே நோக்கம்.

தற்போதுள்ள வங்குரோத்து நிலையில் இருந்து மீள, சரியான பயணப் பாதையில் பயணிக்க வேண்டும். நாடு அனுபவித்த அவலத்தை அடுத்த தலைமுறைக்கு வழங்கக் கூடாது. அடுத்த சந்ததியினருக்குச் சிறந்த நாட்டை உருவாக்கிக் கொடுப்பதே எமது நோக்கமாகும் என தெரிவித்தார்.

மேலும், உலகம் புதிய தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில், அந்த புதிய தொழில்நுட்பத்தை இந்நாட்டில் கல்விக்கு வழங்காமல் இருப்பது பாடசாலை மாணவர்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாடாகும் எனவும் குறிப்பிட்டார்.

# "8 விடயங்களை பின்பற்ற மக்கள் முன்வர வேண்டும்"

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அங்கு கருத்துரைத்த மார்ச்-12 அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன்,

உள்ளூராட்சிமன்ற, மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் எப்படியான அரசியல்வாதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு நாம் இச்செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

மார்ச் -12 அமைப்பின் பாரிய நிகழ்ச்சி திட்டம் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

அரசியல்வாதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்றால் 8 விடயங்களைப் பின்பற்றிச் செயற்பட மக்கள் முன்வர வேண்டும். அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நாம் நடாத்தி அதன் ஊடாக பல்வேறு பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றோம்.இதன் பிரகாரம் அவர்கள் எம்முடன் ஓர் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல்வாதியாக இருக்க வேண்டும்.ஊழல் இலஞ்சம் அற்ற ஒருவராக இருக்க வேண்டும்.நிதி நிலைமைகளைத் தெளிவாக அறிந்த ஒருவராக இருத்தல் வேண்டும். சமூகத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும். இது போன்று பல செயற்பாடுகளை நாங்கள் முன்வைத்துள்ளோம். இவ்வாறான விடயங்களை அரசியல் கட்சிகளும் ஏற்றிருக்கின்றார்கள். இங்கு மக்கள் அரசியல்வாதிகளுக்கு பல்வேறு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். இதைதான் மக்களிடம் நாம் எதிர்பார்க்கின்ற விடயங்களாகும். இதற்குத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தி இருக்கின்றோம்.இவ்வட்டையில் மக்கள் ஒவ்வொருவரும் அரசியல்வாதிகளை எவ்வாறு கணிப்பீடு செய்வது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றார்.

வி.ரி சகா தேவராஜா கருத்து

மார்ச்-12 அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் வி.ரி சகா தேவராஜா கருத்து தெரிவிக்கையில், மார்ச்-12 இயக்கம் என்பது தூய்மையான அரசியலை நோக்கிய பயணிக்கின்ற ஓர் அமைப்பு. இலங்கையில் சம காலத்தில் இருக்கின்ற அரசியலானது துரதிஸ்டவசமாக சற்று வித்தியாசமாகச் சென்று கொண்டிருக்கின்றது. எனவே, இதில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக இந்த மார்ச் 12 இயக்கமானது உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதாவது தகுதியானவர்கள் அரசியல்வாதிகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். தென்னாசிய நாடுகளில் துரதிஸ்டவசமாக இனத்துவ, மதத்துவ அரசியல்கள் தலைவிரித்தாடுகின்றது. இவ்வாறானவற்றை நிறுத்த வேண்டும் என்பது தான் மார்ச்-12 இயக்கத்தின் நோக்கம் என்றார்.

# காய்கறிகளின் விலைகள் வேகமாக குறைந்தன

அதன்படி, பொதுச் சந்தையில் கேரட் கிலோ கிராம் 400 ரூபாயாகவும், போஞ்சி கிலோ கிராம் 400 ரூபாயாகவும், முட்டைகோஸ் 450 ரூபாயாகவும், தக்காளி 320, வெண்டைக்காய் 300, மிளகாய் 600, கத்தரிக்காய் 250, பீட்ரூட் 500, உருளைக்கிழங்கு 220, மற்றும் கிழங்கு 220, பாகற்காய் 450க்கும், பச்சை மிளகாய் 600க்கும், எலுமிச்சை 200க்கும் விற்கப்படுவதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கொழும்பு மெனிங் சந்தையில் போஞ்சி 300 ரூபாவுக்கும், கரட் 1 கிலோ கிராம் 300 ரூபாவுக்கும், முட்டைக்கோஸ் கிலோ கிராம் 320 ரூபாவுக்கும், தக்காளி கிலோ கிராம் 300 ரூபாவுக்கும், கத்திரிக்காய் கிலோ கிராம் 150 ரூபாவுக்கும், 250 கிலோகிராம் விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது என வாடிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

# வர்த்தமானி இரத்து

மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, சாதிக்காய், ஏலக்காய் உள்ளிட்ட பலசரக்கு பொருட்கள் மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக குறித்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உள்நாட்டில் குறைந்தபட்சம் 35 சத வீதம் பெறுமதி சேர்க்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான அறிவித்தல் அடங்கிய அதிவிசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டிருந்தது. அந்த வர்த்தமானி அறிவித்தலே இரத்து செய்யப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, உலர் மஞ்சளை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. குறித்த பலசரக்கு பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குக் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் டிசெம்பர் 6ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனைக்கமைய, குறித்த பலசரக்கு பொருட்களை மீள் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மனித எலும்புகளில் காபன் பரிசோதனை

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு விசாரணையானது மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (11) எடுத்து கொள்ளப்பட்டது.

இந்நிலையில், சட்ட வைத்தியர் கேவகேயின் அறிக்கை நான்கு மாதங்களில் தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றின் ஆஜராகியிருந்த சட்டத்தரணி நிறைஞ்சன் தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வர மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகள் காபன் பரிசோதனைக்காக அனுப்பப்பட இருந்த நிலையில் அதற்கான நிதி வசதிகள் மேற்கொள்வதற்காக? காணாமல் போனோருக்கான அலுவலகத்திடம் அதற்கான விலை மனு கோரப்பட்டு இருந்ததாகவும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அதற்கான பதிலை அளிக்க முடியாத நிலை காணப்பட்டமையால் அதற்கு பிறிதொரு தவணையை கோரியதாகவும் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணைக்கு அழைக்க மே மாதம் 13ஆம் திகதி திகதியிடப்பட்டுள்ளது.

# முதியவரான சிறிய தந்தைக்கு 12 வருட கடூழிய சிறை

செவ்வாய்க்கிழமை (12) வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி மற்றும் 2012ஆம் ஆண்டு ஜூலை ஆகிய காலப்பகுதிகளில் பதினாறு வயதிற்கும் குறைவான தனது பெறாமகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அச்சிறுமியின் சிறிய தந்தையான முதியவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு, கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.எம்.எம் சகாப்தீனால் வழங்கப்பட்டது.

எதிரிக்கு 12 ஆண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 12 மாத கால சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்துமாறும் தவறும் சந்தர்ப்பத்தில் 24 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எதிரி சார்பாக முன்னிலையான சட்டத்தரணி குறித்த குற்றவாளியானவர் நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்த சிகிச்சைகளைப் பெற்று வருவதாகவும் மன்றுக்கு விண்ணப்பம் செய்திருந்தார் இதனைக் கவனத்தில் எடுத்த மன்று குறித்த குற்றவாளிக்குச் சிறைச்சாலையில் வைத்திய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கட்டளையிட்டுள்ளது.

# மனைவியிடமிருந்து கணவனை அபகரித்து கடத்தி வெட்டிக்கொலை

இந்நிலையில் குறித்த நபரை கடத்திச் சென்றவர்கள் அவர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்ட பின்னர் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையினுள் காரில் சென்று, வைத்தியசாலையில் உள்ள மாமரத்துக்குக் கீழே அவரை தூக்கி வீசிவிட்டுச் சென்றனர்.

இந்நிலையில் இது குறித்து வைத்தியசாலையில் இருந்த சுகாதார பணியாளர்கள் வைத்தியருக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினர்.

அவ்விடத்திற்கு வந்த வைத்தியர், நோயாளர் காவு வண்டி மூலம் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார் எனினும், அவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில், மூவரை அடையாளம் கண்டு உள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆலயம் ஒன்றில் கடந்த வருடம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் இரு இளைஞனர்கள் காயமடைந்திருந்தனர். படுகொலை செய்யப்பட்ட இளைஞனே அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு உள்ளதாகவும், அதற்குப் பழி தீர்க்கும் வகையில் குறித்த கொலை சம்பவம் இடம்பெற்று இருக்கலாமென ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

# "வெளியரங்கை தவிர்க்கவும்"

அம்பாறை, திருக்கோவில் பாடசாலையில் கல்வி கற்கும் 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நாட்களில் வெப்பமான காலநிலை நிலவுவதன் காரணமாக வெளியில் செல்வதை மட்டுப்படுத்துமாறு பாடசாலை அதிகாரிகளுக்குக் கல்வி அமைச்சு பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த யாப்பா - மதிவ் ஹெட்ஜஸ் சந்திப்பு



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை, ஜனநாயகத்துக்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்தின் ஆசியா, பசிபிக் மற்றும் அமெரிக்கா பிராந்திய பணிப்பாளர் மதிவ் ஹெட்ஜஸ் (Matthew Hedges) பாராளுமன்றத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் ஜனநாயகத்துக்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்தின் இலங்கை பணிப்பாளர் சஞ்சே விக்னராஜா ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

இலங்கை பாராளுமன்றத்துடன் நெருக்கமாக பணியாற்றும் ஜனநாயகத்துக்கான வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்தினால் பாராளுமன்றத்திலுள்ள அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்ட குழுக்களின் செயற்பாடுகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது பாராட்டியுள்ளார்.

# “அசட்டை வேண்டாம்”

■ ஏ.எம்.ஜலீல்

மழைக்காலம் ஓய்ந்து விட்டது, கடுமையான வெப்ப காலநிலை நிலவுகின்றது என்பதனால், யாரும் அசட்டையாக இருந்து விடவேண்டாம் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்துள்ளனர்.

கடுமையான வெப்பம் நிலவுவதால், தொற்று நோய்களைப் பரவக்கூடிய நுளம்புகள் உற்பத்தியாவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு, ஆகையால், வீடு, வீட்டைச் சுற்றியிருக்கும் சூழல் உள்ளிட்டவற்றைச் சுத்தம் செய்யவேண்டிய



அவசியமில்லையென நினைக்கக்கூடாது. மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருக்கக்கூடாது என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக பெய்த அடைமழையை அடுத்து, நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்திருந்தது. இதனால், டெங்கு உள்ளிட்ட நோய்த் தாக்கங்களுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இந்நிலையில்தான், வெப்பமான காலநிலை தொடர்ச்சியாக நீடித்துக்கொண்டே செல்கின்றது.

இதனால், தங்களுடைய வீடு மற்றும் சுற்றுப்புறங்களில், தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை அகற்றாமல் அவ்வாறே பலரும் விட்டு விடுகின்றனர்.

திடீரென மழை பெய்யுமாயின், அவ்வாறான பாத்திரங்கள் மற்றும் பொருட்களில் மழைநீர் தேங்கிவிடும். இது, நுளம்பு பெருக்கத்துக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும் தங்களுடைய சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இதனூடாகவே தொற்றுநோய்கள் பெருகுவதைத் தவிர்க்க முடியும் என்றும் பொது சுகாதார பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

# ரமழான் விசேட விடுமுறையை விண்ணப்பித்து பெற நிர்ப்பந்தம்

■ ஏ.எச் .ஹஸ்பர்

அரசாங்கத்தினால் முஸ்லிம் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட ரமழான் விடுமுறையை விண்ணப்பித்துதான் பெறவேண்டும் என கிழக்கு மாகாண சபையின் சில அலுவலகங்களில் நிர்ப்பந்திக்கப்படுவதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் செவ்வாய்க்கிழமை (12) தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

“முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு தொழுகையிலும் மத வழிபாடுகளிலும் கலந்துகொள்ளக்கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் என 04/2024 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கை அமைச்சுச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள். திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைத் தலைவர்களை விழித்து வெளியிடப்பட்டுள்ளது.



எனினும், கிழக்கு மாகாண சபையின் சில அலுவலகங்களில் இந்த விசேட விடுமுறையைப் பெற விரும்புபவர்கள் அதற்காக விண்ணப்பித்து முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது சுற்றறிக்கைக்கு முரணான செயற்பாடாகும். அரசு முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு இந்த ரமழான் காலத்தில் கொடுத்துள்ள சலுகைகளைத் தடை செய்கின்ற ஒரு செயற்பாடாகும். சில அதிகாரிகளின் குரோத எண்ணம் இதன் மூலம் தெளிவாகப் புலப்படுகின்றது.

முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் தொழுகையிலும், மதவழிபாடுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, ஒருவர் முஸ்லிம் உத்தியோகத்தர் என தெரிந்தால் அவருக்கான இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அலுவலகப் பிரதானியின் கடமையாகும். கிழக்கு மாகாண சபையில் சமீப காலமாக உருவாக்கப்பட்டு வரும் முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் ஒரு பகுதியாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது. ”என தெரிவித்துள்ளார்.



# விபத்தில் பொலிஸ் ஜீப் சேதம்

முல்லைத்தீவு - மாங்குளம், ஒட்டுசுட்டான் வீதியில் பொலிஸ் ஜீப் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் திங்கட்கிழமை (11) மாலை 06.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளையில் இருந்து மாங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பொலிஸ் வாகனம், கரிப்பட்டமுறிப்பு தச்சடம்பன் பகுதியில் வைத்து வீதியினை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளது. வாகனத்தில் சென்ற இரு பொலிஸ் அதிகாரிகளும் சிறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் ஜீப் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# தப்பிச் செல்ல முயன்ற நபர் சுட்டுக்கொலை

மொனராகலை பிரதேசத்தில் பொலிஸ் பிடியிலிருந்து தப்பிச் செல்வதற்கு முயன்ற துப்பாக்கிதாரி திங்கட்கிழமை (11) சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மல்வத்து - ஹிரிபிட்டிய பிரதேச பௌத்த பிக்கு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர், பொலிஸ் பிடியிலிருந்து தப்பிச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட மோதலில் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் அத்தனகல்ல, யதவக்க பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்க அழைத்துச் செல்லும்போது தப்பிச் செல்ல முயன்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பேரீச்சம் பழங்கள் கையளிப்பு

■ எம்.எஸ்.எம்.ஸாகிர்

அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களைக் கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (12) சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹானின் ஒருங்கிணைப்பின் கீழ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது-மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் ஏ.எல்.எம்.மன்சூர் கலந்து கொண்டுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றசீது மற்றும் ஏனைய பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# புதிய மாடிக் கட்டடம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்-இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கான புதிய மாடிக் கட்டட நோயாளர் விடுதி, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸினால் திங்கட்கிழமை (11) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதியை பார்வையிட்ட ஆளுநர், முதலாவது நோயாளரையும் விடுதியில் அனுமதித்துள்ளார்.

இதன்போது பிரதம விருந்தினருக்கான உரையை ஆற்றிய ஆளுநர்,

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறையை கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களை அதிகரித்து சுகாதாரத்துறையை வீழ்ச்சியடைய செய்ய தான் ஒருபோதும் விரும்பவில்லை.



தற்கால உணவு பழக்கவழக்கம் உள்ளிட்ட செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய நோய்களை தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டும்.

கிராமிய, பிரதேச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை வடக்கு மாகாணத்தில் காணப்படுகிறது.

மேலும், இளவாலை கிராமத்திற்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் எனக்கு உள்ளது.

இந்த விடயங்களை கருத்திற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் எனவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இளவாலை கிராம அபிவிருத்திக்காக செயற்படும் வருத்தப்படாத வாலிபர் சங்கம் மற்றும் நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்களுக்கும் ஆளுநர் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர்கள், அதிகாரிகள், நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்துக்கொண்டுள்ளனர்.



# பாயும் தோட்டாக்களும் கேள்விக்குறியாகியுள்ள சட்டம், ஒழுங்கும்

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தமது கடமைகளை முறையாக மேற்கொள்கின்றனரா எனும் கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

குறிப்பாக, இந்த ஆண்டில் மாத்திரம் இதுவரையில் சுமார் பத்து வரையிலான துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆங்காங்கே நடந்தேறியுள்ளன. இதில் சுமார் 15 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் வருபவர்களால் நேற்று முன்தினம் தென் பகுதியின் இரு நகரங்களில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் மூவர் பலியாகியுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் பெற்றுள்ள நிலையில், இந்த குற்றச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றமை மக்கள் மத்தியில் ஒருவித விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. காரணம், 'யுக்திய' எனும் பெயரில் போதைப் பொருள் ஒழிப்பு, குற்றச் செயல் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள் கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நிலையில், தொடர்ந்தும் இது போன்ற குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றமை எவ்வாறு சாத்தியமாகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களுக்குப் போதியளவு பாதுகாப்பு இல்லாமல் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை நிலவும் நிலையில், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்ந்தும் அமைதி காத்து வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் சமூக வலைத்தளமொன்றில் முன்னெடுக்கப்பட்ட நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றின்போது, இவ்வாறான குற்றச் செயல்களில், இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுவதாகப் பரபரப்பான தகவல் வெளியாகி இருந்தது.

சிலர் இராணுவத்திலிருந்து வெளியேறியவர்களாகவும், சிலர் கடமையிலுள்ள போது, உத்தியோகப்பூர்வமற்ற வகையில் சமூகமளித்து இந்த சம்பவங்களை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்தத் தகவல் உண்மையாக இருந்தால், இந்த சம்பவங்களுடன் நாட்டின் அதிகார பொறுப்பிலுள்ளவர்களுக்கும் தொடர்பு இருக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் எனும் வகையில் இந்த சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. தேர்தல் பற்றி பரவலாகப் பேசப்படும் நிலையில், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அவரின் கடமையாகும்.

சட்டம், ஒழுங்கு செயற்பாடுகளுக்குப் பொறுப்பான அமைச்சரின் செயற்பாடுகளும் திருப்திகரமானதாக இல்லை. நாட்டில் சட்டம், ஒழுங்கு என்பது சாதாரண அப்பாவி பொது மக்களுக்கு மாத்திரம் மட்டுமே ஏற்புடையதாக அமைந்துள்ளதா எனவும் எண்ணத் தோன்றுகின்றது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பி வைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பி வைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# கோட்டாவை விரட்டியது சதியா? விதியா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2022ஆம் ஆண்டு தாம் ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டதைப் பற்றி ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.

அது ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. "ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி" என்பதே அதன் பெயராகும்.

வெளிநாட்டு சதியொன்றின் மூலமே தாம் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டதாக அவர் அதில் குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால், சதிக்குத் தலைமை தாங்கிய அந்த வெளிநாட்டுச் சக்தி எது என்பதை அவர் அதில் குறிப்பிடவில்லை. அதேவேளை, தம்மையும் தமது அரசாங்கத்தையும் பாதுகாக்கத் தவறியமைக்காக அவர் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரை குறை கூறியிருக்கிறார்.

தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் முற்றாக சீரகுழைந்தமையே தமது அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் அவர் கூறுகிறார். அத்தோடு, தாம் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவிலேயே பதவிக்கு வந்ததாகவும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று ஆறு மாதங்களில் நடைபெறவிருக்கும் நிலையிலேயே அவர் தமது புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறார். எனவே, அத்தேர்தலில் அவரது குடும்ப கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு மக்களிடம் அனுதாபத்தைத் தேடிக் கொடுக்கும் முயற்சியாகப் பலர் இப்புத்தக வெளியீட்டைக் கருதுகின்றனர். குறிப்பாகத் தாம் சிங்கள பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதை அதனால் தான் அவர் குறிப்பிடுகிறார் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சில விந்தையான கருத்துக்களும் இதில் அடங்கி இருக்கிறது. தாம் பதவியிலிருந்து தூக்கி எறியப்படும் போது தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் சீர்குலைந்து இருந்ததாக அவர் கூறுவதே அதிலும் மிகவும் விந்தையான கருத்தாகும்.

'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலத்தில் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினமன்று முஸ்லிம் பயங்கரவாதிகள் சிலர் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து நடத்திய குண்டுத் தாக்குதலை அடுத்து அப்போதைய அரசாங்கம் தேசியப் பாதுகாப்பையும் புலனாய்வு இயந்திரத்தையும் சீர் குழைத்தமையே அத்தாக்குதல்களுக்குக் காரணம் என்று பொதுஜன முன்னணியும் கோட்டாபயவும் கூறினர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் மிகப் பலமாக இருந்ததாகவும் கூறினர்.

அத்தாக்குதல் இடம்பெற்று ஆறு நாட்களில் கோட்டா, தாம் அதே ஆண்டு நடைபெறவிருந்த அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவித்தார். அதனையடுத்து அவரும் அவரது கட்சியினரும் பயங்கரவாத தாக்குதலைப் பாவித்து முஸ்லிம்களுக்கு எதிராக மிக மோசமான முறையில் இனவாதத்தைத் தூண்டியும் மஹிந்தவும் கோட்டாவும் புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்தவர்கள் என்றும் மக்களை உசுப்பேற்றி ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர்.

தாம் பதவியிலிருந்து தூக்கியெறியப்படுவதற்குக் காரணம் தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் சீர்குலைத்தது என்று இப்போது கோட்டா கூறுவதாக இருந்தால், அப்போது பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர் யார் என்ற கேள்வி எழுகிறது. இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியே பாதுகாப்புக்குப் பொறுப்பானவர். அவரே பாதுகாப்புப் படைகளின் பிரதம கட்டளைத் தளபதியும் ஆவார். அவ்வாறாயின், தேசியப் பாதுகாப்பும் புலனாய்வுத்துறையும் சீர்குலைந்தமைக்கு ஜனாதிபதியாக இருந்த கோட்டாவே தான் பொறுப்பை ஏற்க வேண்டும்.

பாதுகாப்புச் செயலாளரையும் இராணுவத் தளபதியையும் அதற்காகக் குறை கூறமுடியாது. அவர்கள் களத்துக்குப் போகக் கூடியவர்களாயினும் இறுதிப் பொறுப்பை ஜனாதிபதியே தான் ஏற்க வேண்டும். அவ்வாறில்லை என்றால், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் வெற்றிக்கும் மஹிந்த உரிமை கோர முடியாது. அவ்வுரிமையை முழுமையாகவே அக்காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுக்கு வழங்கியிருக்க வேண்டும்.

பாதுகாப்புச் செயலாளரும் இராணுவத் தளபதியும் 2022 ஜூலை மாதம் 9ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தை பலத்தை உபயோகித்து அடக்காதமையே அன்று தமக்கு நாட்டை விட்டுத் தப்பி ஓட வேண்டிய நிலை ஏற்படக் காரணம் என்பதே அவரது கருத்தாக இருக்கிறது. ஆனால், அவர்கள் அதனைச் செய்யாவிட்டால் முப்படைகளின் பிரதம கட்டளைத் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி அதற்கு உத்தரவைப் பிறப்பித்திருக்க வேண்டும்.

ஒரு வருடத்துக்கு முன்னர் அதாவது 2021இல் ஆசிரியர்கள் ஆரப்பாட்டம் நடத்தியபோது, அவர்களைத் தாக்கி ஆர்ப்பாட்டத்தை அடக்க வேண்டும் என்று அப்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருந்தார். ஆனால், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் சந்தேகிக்கப்படுவோர் மீது வெளிநாடுகளில் சட்ட நடவடிக்கை எடுக்க ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு இருந்தது. இந்த நிலையில், தாமும் அந்தப் பட்டியலில் சேரக்கூடும் என்ற அச்சத்தில் கோட்டா இருந்துள்ளார். எனவே, ஆசிரியர்களை தாக்குவதைக் கோட்டா விரும்பவில்லை. எனக்கு வெளிநாடொன்றுக்காவது போக முடியாத நிலையை ஏற்படுத்தப் போகிறீரா என்று அப்போது கோட்டா சரத் வீரசேகரவிடம் கேட்டதாக அந்நாட்களில் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. ஜனாதிபதி பதவிக் காலத்துக்குப் பின்னர் மீண்டும் அமெரிக்காவுக்குச் செல்ல அவர் உத்தேசித்திருந்தமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

மக்களின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவே கோட்டா அன்று முதலில் மாலைத்தீவுக்கும் பின்னர் சிங்கப்பூருக்கும் தப்பிச் சென்று அங்கிருந்தே தமது இராஜினாமாக் கடிதத்தை சபாநாகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பியிருந்தார். அந்த ஆர்ப்பாட்டம் வெளிநாட்டுச் சதியின் காரணமாக ஏற்பட்டதா அல்லது பொருளாதார சுமையைத் தாங்க முடியாத மக்கள் கிளர்ந்தெழுந்தார்களா என்பதைக் கோட்டா இன்னமும் விளங்கிக் கொள்ளாவிட்டால் அவர் அரசியல் குழந்தை என்றே கூற வேண்டும்.

அவர் 2019 ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு மாதத்தில் அவர் பெருமளவில் வரிகளைக் குறைத்தார். அதனால் அரச வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமான பணத்தை அரசாங்கம் இழந்தது. இதனையடுத்து, கொவிட் தொற்று நாட்டை தாக்கியதில் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன. அதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாடு ஏற்பட்டது. அது இலங்கை நாணயத்தின் பெறுமதியை மேலும் குறைத்தது. இதற்கிடையே கையிருப்பில் உள்ள வெளிநாட்டுச் செலாவணியைப் பாதுகாக்கவென அரசாங்கம் இரசாயன உர இறக்குமதியைத் தடை செய்தது. அதன் விளைவாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படவே வெளிநாட்டுச் செலாவணியைச் செலவழித்தே உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய நேரிட்டது. இவ்வாறு வெளிநாட்டுச் செலாவணித் தொகை கரைந்து கொண்டு போகவே ரூபாவின் பெறுமதி முன்னொருபோதும் இல்லாதவாறு குறைந்தது.

ரூபாவின் பெறுமதியைக் குறையாது தக்கவைத்துக் கொள்ள அரசாங்கம் கையிருப்பிலிருந்த டொலர்களை சந்தையில் கொட்டியது. அது தற்காலிக ஆறுதலை வழங்கினாலும் கையிருப்பில் டொலர் இல்லாத காரணத்தால் சில நாட்களில் ரூபாவின் பெறுமதி மேலும் குறைந்தது. இறக்குமதி பொருட்களின் விலையும் ஏறியது. பொருட்களை இறக்குமதி செய்யக் கையிருப்பில் டொலரும் இல்லாமல் போய்விட்டது. எனவே, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. அது மின்சாரம் உள்ளிட்ட சகல துறைகளையும் பாதித்தது.

விலைவாசி வானலவாக உயர்ந்தது. எரிபொருட்களுக்காகவும் எரிவாயுவுக்காகவும் மக்கள் நாட்கணக்கில் கியூ வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு நாளைக்கு 13 மணித்தியாலம் வரை மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மக்கள் வெறிகொண்டு கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் 2022 ஏப்ரல் 9ஆம் திகதி முதல் ஜனாதிபதியின் அலுவலகத்தின் முன்னால் நிரந்தரமாகத் தங்கியிருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒரு மாத காலமாக அப்போராட்டம் மிகவும் அமைதியாக நடைபெற்றது. நாடெங்கிலும் இருந்து வந்த மக்கள் ஆயிரக் கணக்கில் அதில் பங்குபற்றினர். ஆனால், மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் ஆரப்பாட்டக்காரர்களை தாக்கியதையடுத்து, நாடெங்கிலும் வன்செயல்கள் வெடித்தன. அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டன. அன்றே பிரதமர் பதவி விலக வேண்டிய நிலைமை உருவாகியது. பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார். அவரும் ஆர்ப்பாட்டக்காரர்களை ஆதரித்தார். ஜூலை 9ஆம் திகதி நாடெங்கிலும் இருந்து மக்கள் இலட்சக் கணக்கில் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர் கோட்டா தப்பிச் செல்ல நேரிட்டது.

இந்நிகழ்ச்சித் தொடரில் எந்த இடத்தில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிட்டன என்பதைக் கோட்டா தமது புத்தகத்தில் குறிப்பிடவில்லை. எனவே இது சதியல்ல, இது நிர்வாகத் திறமையற்ற ஆட்சியின் விளைவாகும்.



## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள். கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும். மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி: பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### தெரு விளக்கு பராமரிப்பில் அலட்சியம்



அநுராதபுரம், ஹொரவபொத்தானை பிரதேச சபைக்குட்பட்ட முக்கறவெவ கிராம பிரதான வீதியில் காணப்படும் சில வீதியோர விளக்குகள் நீண்ட காலமாக எரியாது காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.


கிராமத்தின் பிரதான வீதியில் தெரு விளக்குகள் எரியாமையால், இரவு வேளைகளில் திருட்டு, போதைப்பொருள் பாவனை மற்றும் வாகன விபத்துக்கள் பெருமளவில் இடம்பெறுவதாகவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த பிரதேசத்தில் நிலவிவரும் தெருவிளக்கு பிரச்சினையை நிவர்த்தி செய்து தர வேண்டுமென உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- றிஸ்னா அசாருதீன்

யாழ்ப்பாண மக்களது

# வாழ்வியலில் பனை மரம்



றிஸ்னா அசாருதீன்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை



பனை மரத்திற்கும் தமிழர்களுக்கும் மிக நீண்டதொரு வரலாறு உண்டு. குறிப்பாக ஈழத்திற்கும் பனை மரத்திற்குமான தொடர்பு உணர்ச்சிப்பூர்வமானது என்று கூடச் சொல்லலாம். இலங்கையில் பனை மரங்களைப் பாதுகாக்கவும் அதிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்யவும் தனித் துறையே உண்டு. இந்த வகையில் யாழ்ப்பாணத்து மக்களது பொருளாதாரம் மற்றும் வாழ்வியலில் ஆரம்பக் காலத்திலிருந்தே பனை மரம் தாக்கம் செலுத்திவருகிறது என்றால் அது மிகையாகாது.

1990இல் பனையின் உற்பத்திகளைக் கணிசமான அளவிற்கு மக்கள் பயன்படுத்தி அக்காலத்தில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டிலிருந்து ஓரளவிற்கேனும் தப்பிக்கொண்டதும் மறக்க முடியாது. இந்த வகையில் பனை சார் உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பிற்கும், பனை சார் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளிகளை ஊக்கப்படுத்தும் முகமாகவும் பனை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணி வரவேற்கத்தக்கதாகும். பனை அபிவிருத்தி அதிகார சபை இலங்கை முழுவதும் தமது பிராந்தியக் காரியாலயங்களை அமைத்துள்ளதோடு, பனை சார் உற்பத்தியை மேம்படுத்தும் முகமாகச் சர்வதேச அரங்கிலும் பனையின் பயன்பாடுகளை எடுத்துக்கூறி உற்பத்திகளின் விற்பனைக்கு வழியமைத்துக் கொடுப்பதில் முனைப்பாகவும் இருந்துவருகிறது.

மேலும், இப்பிரதேசங்களில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது அதிகளவான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னரான, மக்களின் மீள் குடியேற்றத்தின் போது வீட்டுத் திட்டங்களுக்காகவும் வியாபார நோக்கில் ஏனைய மாகாணங்களுக்குக் கொண்டு செல்வதற்காகவும் அதிகளவான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இப்போது விவசாய நிலங்களின் அபிவிருத்திக்கென்றும் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதிகளவிலான கைத்தொழில் மூலப்பொருட்கள் இயற்கையாகக் கிடைக்கக் கூடியவையாக இருக்கின்றன.

எனவே, இதனால் சுற்றுச்சூழல் மாசடைதல் என்பது ஓரளவேனும் குறைக்கப்படுகிறது. பனை சார் பொருள்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைகூடல் ஆகியவற்றில் இன்றைய கால கட்டத்தைப் பொறுத்தளவில் சிக்கல்கள் எழுந்தவண்ணம் உள்ளன. போதிய முதலீடின்மை மற்றும் தொழிலாளர் எண்ணிக்கைக் குறைவு ஆகியன பெரும் சிக்கல்கள் எனக் கூறப்படுகின்றன. மிகக் குறைந்த வருமானத்தையே நல்கும் நிலையில் பனை சார் தொழில் இருப்பதால் தொழிலாளர்களைப் பெருமளவில் ஈர்க்க முடியாமல் இத் தொழில் மெல்ல மெல்ல நலிந்து செல்லும் அச்சுறுத்தலைச் சம்பவித்து வருகிறது.

இந்த வகையில், பனைமரம் ஆரோக்கியத்திற்கு மட்டுமில்லாமல் இயன்றளவிலும் பலரின் வாழ்வாதாரமாகக் கூட இருந்து வருகிறது. இது அப் பிரதேச வாழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். ஏனெனில், அந்தளவிற்கு அதிலிருந்து ஏராளமான பயன்கள் கிடைக்கப் பெறுகின்றன. ஆண்கள் மாத்திரமின்றி, பெண்களும் பனை சார் உற்பத்திப் பொருட்கள் மற்றும் அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் அலங்காரப் பொருட்களை வீட்டிலிருந்து கொண்டே தயாரிக்கக் கூடிய தொருபோக்கும் இருந்து வருகிறது.

பனை மரத்தில் தேவையற்றது என்று எதுவுமே கிடையாது. பனம் பழம் முதற்கொண்டு அதன் வேர் வரை இலாபம் ஈட்டித் தரக்கூடிய ஒன்றாக இதுவரை இருந்துள்ளது. பனை மரங்களைக் கொண்டு பல்வேறு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், அவற்றை வாழ்வாதாரத் தொழிலாக ஏற்றுச் செய்பவர்களையும் முன்னர் பல்வேறு இடங்களிலும் காணலாம். ஆனால், காலப்போகில் அவை மருகி, இன்று அங்கும் இங்கும் என்று மூலைக்கொரு பனை சார் கைத்தொழிலாளிகளையே காணமுடிகின்றது.

குறிப்பாக, பனை மரங்களின் கீழே இருக்கும் பனை விதைகளைப்பெற்று பனங் கிழங்கு உற்பத்தி செய்யும் பண்பாடு இப்போது மிகவும் அருகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள குடிசை கைத்தொழில்கள் பற்றி தேசிய ரீதியாக அதிகளவில் கவனம் செலுத்தப்படாத ஒரு போக்கும் இன்றைய காலச் சூழலிலிருந்து வருகிறது. குறிப்பாக பனம் பொருள் சார் உற்பத்திப் பொருட்கள் தேசிய உற்பத்தியில் பாரிய பங்களிப்பினை செலுத்தி வருகிறது என்றே கூறலாம்.

அதில் பனையோலை மிகப் பிரதானமானது. பனையோலையில் அழகிய கைவினைப் பொருள்கள், வீட்டு உபயோக பொருள்கள், பனை விசிறி, பனை ஓலையை வைத்துக் கலைப் பொருள்கள் செய்து சிலர் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

பனை மரத்திலிருந்து வரும் பனையோலைகளை வைத்து கலைப்பொருள்கள், நார் பெட்டி, ஓலைப் பெட்டி, சிலம்பு கம்பம், கல்யாண பாய்கள், இடியாப்பம் தட்டு, விதவிதமான கூடைகள், விசிறி, தொப்பி ஆகிய பொருள்களை சில மக்கள் கைத்தொழிலாகச் செய்து வருகின்றனர். ஆகவே, பனைமரம் பலருக்கு சுய தொழிலுக்கான வாய்ப்பாகவும், இன்னும் சிலருக்கு வாழ்வாதாரமாகவும் மற்றும் தேசிய உற்பத்தியைப் பெருக்குவதிலும் துணை நிற்கிறது.

மேலும் பனை மரத்திலிருந்து நுங்கு, கள், பனங்கிழங்கு, பனைவெல்லம் என்பன பெற்றுக் கொள்ளப்படுவதோடு பனை வெல்லத்திலிருந்து கிடைக்கும் "பனங்கற்கண்டு" இனிப்புச் சுவையைக் கொண்டதாகும். பனங்கற்கண்டை உணவில் சேர்ப்பதால் வாய் துர்நாற்றம், ஞாபகசக்தி, நோய் எதிர்ப்புச் சக்தி, உடல் வெப்பம் சீராதல் போன்ற ஏராளமான நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன. டீ மற்றும் தேநீர்ப் பிரியர்கள் ஏராளமாக இருக்கும் இந்த உலகில் வெள்ளைச் சர்க்கரை பயன்படுத்தாமல் கருப்பட்டி வெல்லத்தினை உபயோகிப்பது சாலச் சிறந்தது.

இதில் கனிமங்கள் மற்றும் விற்றமின்கள் செறிவாக இருக்கிறது. மேலும், இதில் சர்க்கரையைவிட 60 மடங்கு கனிமங்களும் இருக்கிறது.

மலச்சிக்கல், உடல் எடை குறைப்பு, உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்புகளை வெளியேற்றுதல், உணவுக்குழாய் மற்றும் நுரையீரல் ஆகியவற்றைச் சுத்தம் செய்தல் போன்றவற்றுக்கு உறுதுணையாய் நிற்கும். பனங் கள் மருத்துவ குணம் கொண்ட பானம் ஆகையால், ஆண்களுக்கு உடல் வலிமையையும், விந்து சக்தியையும் அதிகரிக்க உதவுகிறது. பனங்கிழங்கு மிகவும் குளிர்ச்சிதன்மை உடையது. இதை வேகவைத்து துண்டுகளாக்கியும், உலரவைத்தும் சாப்பிடலாம். இதில் நார்ச்சத்து இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் சாப்பிட்டால் விரைவில் குணமடையவும் செய்யும்.

பனை மரங்களும், பனையேறிகளும் குறைந்து வருவதால், பனை மரத்தின் முக்கியத்துவம் மற்றும் பனை பொருளாதாரத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் முயற்சியானது பனை சார் உற்பத்தியாளர்களிடையே முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மூலப் பொருட்களின் விலை, பனை ஓலைகளுக்கு நிற மூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களது விலை என்பன சடுதியாக அதிகரித்துள்ளமையால் உற்பத்திப் பொருட்களையும் அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக இவர்களின் விற்பனையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோல் மழைக் காலங்களில் இவர்களுக்கு இந்த தொழிலைச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. மழைக் காலங்களில் மூலப் பொருளான ஓலைகளைப் பெற்றுக்கொள்ளுவதில் இவர்கள் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகிறார்கள். இவர்களால் உருவாக்கப்படும் பனை பொருட்களை இவர்களிடம் சிலவியாபாரிகள் வந்து பெற்றுச் செல்கின்றனர். ஆனால், அதற்காக அவர்கள் குறைந்தவிலையையே வழங்குகின்றனர். ஆனால், வெளிப் பிரதேசங்களில் இந்தப் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. பாய், கூடை, போன்ற பின்னல் வேலைகளை இவர்கள் செய்து வந்தாலும் இவர்களின் பொருட்களுக்குத் தகுந்த சந்தை வாய்ப்பு இல்லையென்பது இவர்களின் பிரதான பிரச்சினையாகும். தம்மால் செய்யப்படும் பொருட்களுக்குத் தகுந்த நியாயமான விலை கிடைக்காமையால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

பனை உற்பத்தியாளர்களை ஊக்கிவிக்கும் பொருட்டு அரசாங்கம் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுத்தரும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ்வாறான கைத் தொழிலை ஊக்கப்படுத்துவது மிக முக்கியமாக இருந்து வருகிறது. ஆகவே, அரசாங்கம் பனை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு சலுகைகளை வழங்கும் பட்சத்தில் குறித்த உற்பத்தித் துறையை வீழ்ச்சி அடையாமல் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பது பனைசார் உற்பத்தியாளர்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. யாழ்ப்பாண பனை உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சிறந்த கேள்வி நிலவுகின்ற நிலையில் குறித்த துறையை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்குச் சகல தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியமாக இருந்துவருகிறது.






# பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம்



மண்முனை, தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் மகளிர் தினத்தினை முன்னிட்டு, பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ், ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் நான்காவது நிகழ்வாக, மகளிருக்கான 'பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாமானது' பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில், சோதிடரும், பாரம்பரிய சித்த வைத்தியருமான கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் கலந்து கொண்டு பாரம்பரிய மூலிகை மற்றும் சித்த வைத்தியம் தொடர்பான அறிவூட்டலினையும், சித்த வைத்திய ஆலோசனையினையும் வழங்கியுள்ளார்.

- வி.ரி.சகாதேவராஜா







# சிங்கள கற்கை பாடநெறி நிறைவு விழா

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள கற்கை பாடநெறி நிறைவு விழா சம்மாந்துறை வலய சிங்கள பாட வளவாளர் ஏ.எச். நாஸிக்அஹ்மத் தலைமையில் சம்மாந்துறை அல்அர்சத் மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்றது. சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் என்று 106 பேர், இந்த 150 மணி நேரப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு நிறைவு செய்துள்ளனர்.

- வி.ரி. சகாதேவராஜா

# 10,000 பெண்களுடன் மகளிர் தின நிகழ்வு







கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பு கல்லடி பூங்கா மைதானத்தில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவனரும் இயக்குநருமான திருமதி சுசித்ரா எல்ல, பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கொவிட் தடுப்பூசியைக் கண்டுபிடித்து, 600 மில்லியன் கொவிட் தடுப்பூசிகளைத் தயாரித்து மக்கள் உயிரைக் காத்த உன்னத பெண்ணாவார். அத்துடன், மட்டக்களப்பு கல்வித்துறையில் சாதித்த பெண்கள், *Rural development society*, பெண்கள் அமைப்புகள் போன்ற பல சாதனைகளை நிலைநாட்டிய பெண்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் கலாசார நிகழ்வுகள், சாதனை படைத்த பெண்களைக் கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றதுடன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் பங்கேற்றிருந்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், அலிசாஹிர் மௌலானா, பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, அரசாங்க அதிபர் உட்பட அரச உத்தியோகஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.













இந்தியா

# தமிழக பெண்ணின் காலில் விழுந்த மோடி

உலகளாவிய பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில், 'கிரியேட் ஒன் இந்தியா' இயக்கத்தை உருவாக்கிட டிஜிட்டல் படைப்பாளிகளுக்குப் இந்தியப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில், தேசிய படைப்பாளிகள் விருதை மத்திய அரசு அண்மையில் அறிவித்திருந்தது. இந்த நிலையில், சமூக மாற்றம், கல்வி, சுற்றுச்சூழல், வேளாண், சமூக வலைத்தளங்கள் உள்ளிட்டவற்றில்




ஆக்கப்பூர்வமாகச் சிறந்து விளங்கிய 23 படைப்பாளிகளுக்குப் புதுடெல்லியில் உள்ள பாரத மண்டபத்தில் வைத்து பிரதமர் மோடி விருதுகளை வழங்கி வைத்திருந்தார்.

இதற்கமைய, சிறந்த கதை சொல்லிக்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த கீர்த்திகா

கோவிந்தசாமிக்கு விருது வழங்கப்பட்டது. அப்போது மரியாதை நிமித்தமாகப் பிரதமர் மோடியின் காலில் கீர்த்திகா கோவிந்த சாமி விழுந்தார். பதிலுக்குப் பிரதமரும் அப்பெண்ணின் காலை தொட்டு வணங்கினார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வேகமாக வைரலாகி வருகிறது.

இந்தியா

# "தமிழ்நாட்டில் CAA சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது"

"பாரதிய ஜனதாகட்சி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை (Citizen Amendment Act (CAA) தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை (12) வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு முற்றிலும் எதிரானது மட்டுமல்ல, பலவகையான மொழி, இன, மதம் மற்றும் வாழ்விட சூழல் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும், ஒன்றுபட்ட உணர்வுடன் வாழ்ந்துவரும் இந்திய மக்களின் நலனுக்கும், இந்தியத் தாய் திரு நாட்டின் பன்முகத் தன்மைக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் முற்றிலும் எதிரானதாகும். அதுமட்டுமல்ல, சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் முகாம் வாழ் தமிழர்களின் நலனுக்கும் எதிரானதுதான் இந்தச் சட்டம்.

அத்துடன், உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திலிருந்து தப்பிப்பதற்காக மக்களைத் திசைதிருப்பும் நோக்கத்துடன், தேர்தல் அரசியலுக்காக இந்தச் சட்டத்தை தற்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதோ என கருத வேண்டியிருக்கிறது.

இந்திய மக்களிடையே பேதங்களைத் தோற்றுவிக்க வழிவகை செய்யும் இந்தச் சட்டத்தால் எந்தவிதமான நன்மையோ, பயனோ இருக்கப் போவதில்லை. இந்தச் சட்டம் முற்றிலும் தேவையற்ற ஒன்று என்பதுடன், இரத்து செய்யப்பட வேண்டியது என்பதுதான் இந்த அரசின் கருத்தாகும். எனவே, ஒன்றிய அரசு நிறைவேற்றியிருக்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றிட தமிழ்நாடு அரசு எவ்வகையிலும் இடமளிக்காது, இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு சட்டத்திற்கும் தமிழ்நாடு அரசு இடம் கொடுக்காது என்பதனை தமிழ்நாட்டு மக்களுக்கு நான் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.




இந்தியா

# பா.ஜ.க கூட்டணியில் சரத்குமார் கட்சி

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார், பாரதிய ஜனதா கட்சியுடன் (பா.ஜ.க.) கூட்டணியை ஏற்படுத்தினார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையிலே, தற்போது தனது கட்சியை பா.ஜ.க உடன் அவர் இணைத்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறியதாவது,

'பா.ஜ.கவின் குடும்பம் பெரிதாகியுள்ளது. தென்னிந்தியாவில் ஒரு நடிகராக எல்லா மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என்றால் அது சரத்குமார்தான். 'பா.ஜ.கவின் குடும்பம் பெரிதாகியுள்ளது. சரத்குமாரின் முடிவு எளிதான முடிவல்ல. இது கடுமையான முடிவு. தமிழ்நாட்டு அரசியலில் ஒரு கட்சி நடத்துவது என்பதே பெரிய விடயம். எல்லாம் பண முதலீடு. இதற்கு மத்தியில் கட்சியை நடத்தியது மிகப்பெரிய விடயம்' எனத் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல்

# மெஸ்ஸியின் பெயரை கூறி தப்பித்த மூதாட்டி

ஹமாஸ் படையினரால் கடத்தப்பட இருந்த மூதாட்டி, பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸியின் பெயரைக் கூறி, அவர்களிடம் இருந்து தப்பித்தது, ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே நடைபெற்று வரும் போரில் பெண்களும், குழந்தைகளுமே அதிகளவில் உயிரிழந்துள்ளதாக ஐ.நா கவலை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அர்ஜெண்டினா நாட்டின் பிரபல கால்பந்து வீரர் மெஸ்ஸியின் பெயரைக் கூறி, ஹமாஸ் படையினரிடம் இருந்து சாதுரியமாக தப்பித்த 90 வயது மூதாட்டியின் செயல் பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இது குறித்து ஹமாஸ் படையினரிடம் இருந்து தப்பித்த மூதாட்டி எஸ்டர் குனியோ கூறுகையில், 'ஹமாஸ் அமைப்பை சேர்ந்த இரண்டு நபர்கள் ஒரு நாள் காலை என்னுடைய வீட்டிற்குள் நுழைந்து எனது குடும்பம் எங்கே? என்று கேட்டனர். அதற்கு நான் மட்டும் தான் தனியாக இருக்கிறேன் என்று எனது மொழியில் கூறினேன். எனக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர்கள் என் மீது கோபப்பட்டு எந்த மொழியில் பேசுகிறீர்கள்? என்று கேட்டனர்.

அதற்கு நான் அர்ஜெண்டினாவின், ஸ்பானிஷ் மொழியில் பேசுகிறேன் என்று கூறினேன். அதற்கு அர்ஜெண்டினா என்றால் என்ன..? என ஒருவர் கேட்டார். அதற்கு நான், நீங்கள் கால்பந்து பார்ப்பீர்களா..? அதில் வரும் மெஸ்ஸியின் ஊர்தான் எனது ஊர் என தெரிவித்தேன். அதை கூறியதும், அவர்களிடம் இருந்த துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் என்னுடன் புகைப்படம் எடுத்துவிட்டு சென்றனர். மெஸ்ஸியின் பெயரை குறிப்பிட்டதால் நான் காப்பாற்றப்பட்டேன்" என்று கூறினார்.




இந்தோனாஷியா

# விமானத்தை திசை மாற்றிய உறக்கம்

நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்றின் இரண்டு விமானிகளும் அரை மணி நேரம் உறங்கியதனால், விமானம் திசைமாறிச் சென்றமை, தற்போது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தோனாஷியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சுலவேசி நகரிலிருந்து தலைநகர் ஜகர்தாவுக்கு, கடந்த ஜனவரி 25ஆம் திகதி 153 பயணிகளுடன் பயணித்த விமானத்தில் 2 விமானிகளும், 4 விமானப் பணியாளர்களும் இருந்தனர்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் தனது வழக்கமான பாதையைவிட்டு விலகிச் சென்றது. இதனால், விமானக் கட்டுப்பாட்டு அறையில் உள்ள அதிகாரிகள் விமானிகள் இருவரையும் தொடர்புகொள்ள முயன்றுள்ளனர். ஆனால், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

சுமார் 35 நிமிடங்கள் இந்த பரபரப்பு நீடித்திருக்கிறது. அதன்பிறகே விமானம் வழக்கமான பாதைக்கு வந்து தனது பயணத்தைத் தொடங்கியது. இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் இரண்டு விமானிகளும் உறங்கியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த விமானத்தில் 32 மற்றும் 28 வயது மதிக்கத்தக்க இரண்டு ஆண் விமானிகள் இருந்துள்ளனர். விமானம் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் அவர்கள் உறங்கியுள்ளனர். இந்த சம்பவத்தில் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதுடன் விமானமும் சரியான நேரத்தில் வந்து தரையிறங்கியுள்ளது. இது தொடர்ந்து விசாரணையும் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.



இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# இன்று ஆரம்பிக்கிறது ஒருநாள் தொடர்

இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது சட்டோகிராமில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் லஹிரு குமார இடம்பெற்றுள்ள நிலையில், அவர் உடற்றகுதி கவனம் பெறுகிறது. தவிர கமிந்து மெண்டிஸ் குழாமில் இடம்பெற்றாலும் அணியில் அவர் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

பங்களாதேஷைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவில் பொறுப்புக் காணப்படுகிறது.



பெரியகல்லாறு ஒலிம்பியா வி.க பி.பி.எல் கிரிக்கெட் திருவிழா தொடர்:

# சம்பியனானது பொட்டுறப்ட்டர்

■ வ.சக்தி




பெரியகல்லாறு ஒலிம்பியா விளையாட்டுக் கழகத்தின் பி.பி.எல் கிரிக்கெட் திருவிழா தொடரில் பொட்டுறப்ட்டர் அணி சம்பியனானது.

நான்கு கழகங்கள் கலந்துகொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது கல்லாறு வெங்களோ கிங்ஸை வென்றே பொட்டுறப்ட்டர் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பொட்டுறப்ட்டர் 10 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 120 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வெங்களோ கிங்ஸ் 9.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 48 ஓட்டங்களையே பெற்று 71 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.




தசைநார் உபாதை காரணமாக

# நான்கு வாரங்களுக்கு எடெர்சன் இல்லை

தசைநார் உபாதை காரணமாக நான்கு வாரங்கள் வரையில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் கோல் காப்பாளர் எடெர்சன் தவறவிடவுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லிவர்பூலுக்கெதிரான லீக் போட்டியிலேயே எடெர்சன் காயமடைந்திருந்தார்.

அந்தவகையில் இம்மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியாளர்களான ஆர்சனலுடனான போட்டியை எடெர்சன் தவறவிடவுள்ளார்.



தெற்காசியாவுக்கான நியூசிலாந்தின் சுற்றுப்பயணத்தின்போது

# அணித்தலைவராக இருப்பேனா எனத் தெளிவில்லாத சௌதி

அடுத்த தொகுதி டெஸ்ட் போட்டிகளுக்காக ஆப்கானிஸ்தான், இலங்கை-இந்தியாவை எதிர்கொள்வதற்காக இவ்வாண்டின் இறுதியில் தெற்காசியாவுக்கு பயணிக்கும் நியூசிலாந்துக்குத் தான் தலைமை தாங்குவதற்கான எந்தவொரு உறுதிப்பாடும் இல்லை என டெஸ்ட் போட்டிகளுக்கான நியூசிலாந்தின் அணித்தலைவர் டிம் சௌதி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் 4 விக்கெட்டுகளையே சௌதி கைப்பற்றிய நிலையில், மற் ஹென்றி, பென் சியர்ஸ், வில் ஓ ரூர்கே ஆகியோர் சிறப்பாக பந்து வீசியிருந்தனர்.




# ஐ.பி.எல்லில் விக்கெட் காப்பாளராக பண்ட்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) டெல்லி கப்பிட்டல்ஸுக்காக விக்கெட் காப்பில் ஈடுபட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உடற்றகுதி மற்றும் மருத்துவ அணிகள் அனுமதித்துள்ளன.

இந்நிலையில், மொஹமட் ஷமி, பிரசீத் கிருஷ்ணா ஆகியோர் ஐ.பி.எல்லிலிருந்து விலகியுள்ளனர்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி, விக்கெட் காப்பில் ஈடுபட்டால் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமில் இடம்பெறுவதற்கான போட்டியில் பண்ட் இருப்பார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜே ஷா தெரிவித்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 13 மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.